Land Transport Authority
We Keep Your World Moving

# 2040

# நிலப் போக்குவரத்து பெருந்திட்டம்

நிலப் போக்குவரத்துப் பெருந்திட்டத்தை ஆகக்கடைசியாக 2013–ஆம் ஆண்டில் உங்களுடன் பகிர்ந்து கொண்டதிலிருந்து, சிங்கப்பூரின் போக்குவரத்து நிலவரம் பல வழிகளில் மாறியிருக்கிறது. சிங்கப்பூரர்களின் வளர்ந்துவரும் தேவைகளை நிறைவேற்றிட, நமது நிலப் போக்குவரத்து முறையின் எதிர்காலத்தை வடிவமைக்கும் வழிவகைகளை நாங்கள் புதிய கண்ணோட்டத்துடன் ஆராய்கிறோம்.

நமது நிலப் போக்குவரத்து 2040–ஆம் ஆண்டில் எப்படி இருக்கவேண்டும் என விரும்புகிறீர்கள்? நாங்கள் நடத்திய பொதுமக்களை ஈடுபடுத்தும் நடவடிக்கைகளில், உங்களில் 7,400க்கும் மேலானோர் தங்களது கருத்துகளையும் விருப்பங்களையும் பகிர்ந்துகொண்டனர். உங்களில் பலருக்கும், நடந்து செல்லவும், மிதிவண்டி ஓட்டவும், பொது மற்றும் பகிர்வு போக்குவரத்தில் செல்லவும் எளிதான, சௌகரியமான, பாதுகாப்பான தெரிவுகளே தீர்வாக அமையும். ஏனெனில், இவையே அதிக செயலாற்றல்மிக்க, நீடித்து நிலைக்கத்தக்க பயண முறைகளாகும்.




## உந்து நடமாட்ட முறைகள்

நீங்கள் நடந்து சென்று, மிதிவண்டி ஓட்டி அல்லது மின்–ஸ்கூட்டர் போன்ற தனிநபர் நடமாட்டக் கருவிகளைப் பயன்படுத்திக் குறுகிய தூரங்களுக்கு எளிதில் பயணம் செல்லலாம்.

## வெகுஜனப் பொது மற்றும் பகிர்வு போக்குவரத்து முறைகள்

நெடுந்தூரப் பயணங்களுக்கு, பேருந்து, ரயில் போன்ற வெகுஜனப் பொதுப் போக்குவரத்து முறைகளையும், டாக்சி, தனியார் வாடகைக் கார்கள், பகிர்வு கார்கள் போன்ற பகிர்வு போக்குவரத்து முறைகளையும் நீங்கள் பயன்படுத்தலாம்.

நிலப் போக்குவரத்துப் பெருந்திட்டம் 2040, சௌகரியமான, நன்கு இணைக்கப்பட்ட, துரிதமான நிலப் போக்குவரத்து முறையைத் தொலைநோக்காகக் கொண்டுள்ளது. பயணிகளுக்குப் பரிவான, அனைவரையும் உள்ளடக்கும் பயண அனுபவம் கிடைக்கும். அதோடு, அனைவருக்கும் ஆரோக்கியமான, பாதுகாப்பான பயணங்கள் அமையவும் வழிவகுக்கும்.




20 நிமிட தூரத்தில் குடியிருப்பு நகரங்கள், 45 நிமிட தூரத்தில் நகர மையம்



**நடந்து சென்றும், மிதிவண்டி ஓட்டியும், வெகுஜனப் பொது மற்றும் பகிர்வு போக்குவரத்தில் சென்றும், நீங்கள்:**


## 20 நிமிட தூரத்தில் குடியிருப்பு நகரங்கள்

நமது அக்கம்பக்க நிலையங்களில் கடைகள், உணவுக் கடைகள், பூங்காக்கள் மற்றும் மருந்தகங்கள் அமைந்துள்ளன. எதிர்காலத்தில் உங்கள் வீட்டிலிருந்து ஆக அருகிலுள்ள அக்கம்பக்க நிலையத்தைச் சென்றடைய 20 நிமிடங்களுக்கு மேலாகாது.





## 45 நிமிட தூரத்தில் நகர மையம்

உங்கள் வீட்டிலிருந்து வேலைக்குச் செல்லும் பயணம் உட்பட, பெரும்பாலான உச்சநேரப் பயணங்களை 45 நிமிடங்களில் அல்லது அதைவிடக் குறைவான நேரத்தில் முடித்திடலாம். போக்குவரத்து மேம்பாடுகளும், வேலைகளை உங்களுக்கு அருகில் கொண்டுவரும் புதிய வட்டார நிலையங்களும் பயண நேரத்தைக் குறைப்பதற்குத் துணைப் புரியும்.



## உங்கள் பயணங்கள் துரிதமாகவும், மேலும் சௌகரியமாகவும், நம்பகமாகவும் அமைய நாங்கள் மேற்கொள்ளும் இந்த முனைப்புகளை நீங்கள் எதிர்பார்க்கலாம்:





### அதிகமான இடங்கள் ரயிலுடன் இணைப்பு

- டௌன்டவுன், தாம்சன் – ஈஸ்ட் கோஸ்ட் பெருவிரைவு ரயில்பாதைகள் 2040–ஆம் ஆண்டுக்குள் நீட்டிக்கப்படும்.
- வடக்கு–தெற்கு பெருவிரைவு ரயில்பாதையில், ப்ரிக்லாண்ட், சுங்காய் காடுட் ஆகிய இரு புதிய ரயில் நிலையங்கள் சேர்க்கப்படும். ரயில் கட்டமைப்பை அதிகமான பயணிகள் பயன்படுத்த இது வழிவகுக்கும்.
- சிங்கப்பூரின் வடக்கு மற்றும் வடகிழக்கு வட்டாரங்களில் புதிய ரயில்பாதை அமைப்பது சாத்தியமா என்பதையும் நாங்கள் ஆய்வு செய்வோம்.


### பேருந்துகளுக்கு முன்னுரிமை

பேருந்துகள் விரைவாக நகர்ந்து செல்ல வழிவிடும் போக்குவரத்து முன்னுரிமை பாதைகளை நாங்கள் அதிகமாக அமைக்கிறோம். பேருந்து தடங்கள், பேருந்துகள் மட்டுமே செல்லக்கூடிய சாலைகள் மற்றும் திரும்பும் தடங்கள், பேருந்துகளுக்கான சமிக்ஞை முன்னுரிமை போன்ற அம்சங்களை முன்னுரிமை பாதைகளில் காணலாம். இவை அனைத்தும் உங்கள் பயணத்தை வேகமாகவும் சரளமாகவும் ஆக்கும்.



## தானியக்க, தேவையின் பேரிலான சேவைகள்

நீங்கள் எந்த நிறுத்தத்திலும் ஏறவும் இறங்கவும் கூடிய இணக்கமான, தேவையின் பேரிலான பேருந்து பயணப்பாதைகளுடன் நீக்குப்போக்கான பயணத்தை அனுபவிக்கலாம். உங்களுக்குத் தேவைப்படும்போது பேருந்தை அழைப்பது போன்றதொரு சேவை இது!






## அதிகமான மிதிவண்டி பாதைகள்

நாங்கள் 2030–ஆம் ஆண்டுக்குள் சுமார் 700 கிலோமீட்டர் நீள மிதிவண்டி பாதைகளைக் கட்டுவதோடு, 2030–ஆம் ஆண்டுக்குப் பிறகும் மிதிவண்டி பாதைகளின் கட்டமைப்பைத் தொடர்ந்து விரிவுபடுத்துவோம். மிதிவண்டிகளை நிறுத்தி வைப்பதற்கும் அதிகமான இடங்கள் அமைக்கப்படவுள்ளன.

## அதிகமான ஒருங்கிணைக்கப்பட்ட போக்குவரத்து மையங்கள்

உங்கள் பயணம் சௌகரியமாகவும் இனிமையாகவும் அமைய, நாங்கள் இன்னும் பல ஒருங்கிணைக்கப்பட்ட போக்குவரத்து மையங்களைக் கட்டுகிறோம். நீங்கள் பயணம் செல்லும்போது வழியில் எளிதாக அலுவல்களைக் கவனித்துவிட்டு அல்லது நண்பர்களைச் சந்தித்துவிட்டு, பிறகு அடுத்த பேருந்தில் அல்லது ரயிலில் பயணத்தைத் தொடரலாம்.




**2040-க்குள் புதிய ஒருங்கிணைக்கப்பட்ட போக்குவரத்து மையங்கள், இவை உட்பட:**


- பிடாடரி
- புவாங்கோக்
- பொங்கோல் நார்த்
- பாசிர் ரிஸ்
- தெம்பினிஸ் நார்த்
- தெங்கா

மற்றும் இன்னும் பல...!

# அனைவருக்குமான போக்குவரத்து



## இந்த முனைப்புகள் மூலமாக நமது நிலப் போக்குவரத்து முறை அனைவரையும் உள்ளடக்குவதாகவும் அனைவராலும் பயன்படுத்தக்கூடியதாகவும் அமையும்:




### உதவும் கரம்

- பரிவோடும் அக்கறையோடும் நடந்துகொள்வது அனைவரது பயண அனுபவத்தையும் மேம்படுத்தும் என்பதைப் பயணிகள் உணர்ந்துள்ளனர்.
- முன்னுரிமை வரிசைகள் போன்ற முனைப்புகள் 2019–ஆம் ஆண்டுக்குள் பெருவிரைவு ரயில் நிலையங்களிலும் மற்றும் 2021–ஆம் ஆண்டுக்குள் பேருந்து நிலையங்களிலும் ஒருங்கிணைக்கப்பட்ட போக்குவரத்து மையங்களிலும் படிப்படியாக அமைக்கப்படும்.
- எங்களது பெருவிரைவு ரயில்பாதைகளில் ஒன்றில் 2020–ஆம் ஆண்டுக்குள் முன்னுரிமை ரயில் பெட்டிகளையும் முன்னோட்டமாக அறிமுகப்படுத்துவோம்.

### சிறப்புத் தேவைகள் நிறைவேற்றம்

- தேவை உள்ளோருக்கு உதவிக்கரம் நீட்ட, பொதுப் போக்குவரத்து ஊழியர்களுக்குக் கூடுதல் பயிற்சி அளிக்கப்படும்.
- MAVIS திறன்பேசி செயலி (பார்வை குறைபாடும் சிறப்புத் தேவைகளும் உள்ளோருக்கான நடமாட்ட உதவி செயலி) போன்ற புதிய தொழில்நுட்பங்களையும் நாங்கள் முன்னோட்டமாகச் சோதிக்கிறோம். சிறப்புத் தேவைகள் உள்ளோர் பேருந்துகளில் ஏறவும் இறங்கவும் உதவி புரியும் ஒலித்தகவல்கள் இத்தொழில்நுட்பத்தில் இடம்பெறுகின்றன.







# தடங்கலற்ற நடமாட்ட வசதி மேம்பாடு

## சக்கர நாற்காலிகளுக்குக் கூடுதல் வசதிகள்

- 2020-ஆம் ஆண்டுக்குள், எல்லா பேருந்து நிறுத்தங்களும் தடங்கலற்ற நடமாட்ட வசதியைக் கொண்டிருக்கும். படிகளைப் பயன்படுத்த சிரமப்படுவோருக்காக, சில பேருந்து நிறுத்தங்களில் சாய்வுத்தளங்கள் போன்ற வசதிகள் அமைக்கப்பட்டிருக்கும்.
- பொதுப் பேருந்துகள் அனைத்திலும் சக்கர நாற்காலிக்கான வசதி இருக்கும். சிறு குழந்தைகளுடன் பேருந்தில் ஏறுவோரின் தள்ளுவண்டிகளை நிறுத்தி வைப்பதற்கான வசதிகளும் அமைக்கப்படும்.
- டாக்சி மற்றும் தனியார் வாடகைக் கார் சேவைகளை வழங்குவோரும், அதிகமான சக்கர நாற்காலிக்கு உகந்த வாகனங்களைக் கொண்டிருக்குமாறு ஊக்குவிக்கப்படுவார்கள்.



## அதிகமான ஓய்விடங்கள்

2021-ஆம் ஆண்டுக்குள் சிங்கப்பூர் முழுவதிலும் தொடக்கமாக முதல் 2,300 பேருந்து நிறுத்தங்களில் முதியோருக்கு உகந்த இருக்கைகள் பொருத்தப்படும்.




## வசதியான, பாதசாரிகளுக்கு உகந்த மேம்பாலங்கள்

2022-ஆம் ஆண்டுக்குள், மேலும் 29 மேம்பாலங்களில் மின்தூக்கிகள் அமைக்கப்படும்.



# ஆரோக்கியமான வாழ்க்கை, பாதுகாப்பான பயணங்கள்



மேம்பட்ட நிலப் போக்குவரத்து முறையுடன் பாதுகாப்பான, ஆரோக்கியமான, வாழத்தக்க சுற்றுப்புறம் உருவாகும். இத்தகைய சுற்றுப்புறத்தில் துடிப்பான சமூக இடங்கள் நிறைந்திருக்கும்.




தூய்மையான எரிபொருள்



## தூய்மையான எரிபொருளில் இயங்கும் வாகனங்கள்

சுற்றுப்புறத்தைக் காத்திட உதவியாக, 2040–ஆம் ஆண்டுக்குள் பொதுப் பேருந்துகள், டாக்சிகள் அல்லது தனியார் வாடகைக் கார்கள் தூய்மையான எரிபொருளில் இயங்கும்.

## பாதுகாப்புக்காகப் புதிய தொழில்நுட்பம்

உங்களின் பாதுகாப்புக்காகப் புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும். புதிய பேருந்துகளிலுள்ள மோதல் எச்சரிப்பு அமைப்பு போன்றவை இதில் உள்ளடங்கும்.






## மேம்பட்ட நடை மற்றும் மிதிவண்டி பயணம்

அகலமான நடைபாதைகள், மிதிவண்டி ஓட்டுவதற்கென தனிப் பாதைகள், பயண முடிவில் கூடுதல் வசதிகள் (குளியலறை, பூட்டுள்ள பெட்டிகள், உலர்த்தும் கூடங்கள் போன்றவை) ஆகியவற்றுடன், நீங்கள் வீட்டுக்கு அல்லது விருப்பப்படும் எங்கு வேண்டுமானாலும் பாதுகாப்பாகவும், சௌகரியமாகவும், ஆரோக்கியமாகவும் செல்லலாம்.



## துடிப்பான சமூக இடங்களை அமைக்க அதிகமான சாலைகள் ஒதுக்கப்படும்

பொதுமக்கள் நடந்து சென்றும் மிதிவண்டி ஓட்டியும் சுற்றிப்பார்க்கும் வகையில் அதிகமான சாலைகள் சமூக இடங்களாக நிரந்தரமாக மாற்றப்படும். எடுத்துக்காட்டாக, ஆர்மினியன் சாலை 2019–ஆம் ஆண்டிலும் மார்க்கெட் சாலை 2021–ஆம் ஆண்டிலும் சமூக இடமாக மாற்றப்படும்.




## அதிகமான கூரையுள்ள இணைப்புப்பாதைகள்

எதிர்வரும் 2040–ஆம் ஆண்டுக்குள் கட்டப்படவிருக்கும் கூடுதலான 150 கிலோமீட்டர் நீள இணைப்புப் பாதைகளுடன், நீங்கள் வீட்டிலிருந்து நிழலில் வியர்வை சிந்தாமல் பயணம் செய்யலாம்.



## குறைவான இரைச்சல்

நிலத்திற்கு மேலே அமைக்கப்பட்டுள்ள ரயில்பாதைகளின் நெடுகிலும் சில சாலைகளின் நெடுகிலும் அதிகமான இரைச்சல் தடுப்புகள் அமைக்கப்படுவதால், அமைதியான சுற்றுப்புறத்தை நாம் அனுபவிக்கலாம்.

நிலப் போக்குவரத்துப் பெருந்திட்டம் 2040–ன் தொலைநோக்கை நிறைவேற்ற நாங்கள் முனைப்புடன் செயல்படுகையில், நீங்கள் செல்லும் இடத்திற்கு நடந்து செல்வதும், மிதிவண்டி ஓட்டுவதும், வெகுஜனப் பொது மற்றும் பகிர்வு போக்குவரத்தில் பயணிப்பதும் எளிதாகும்.

இப்பயணத்தில் எங்களோடு துணை வருவதற்கு நன்றி. நமது நிலப் போக்குவரத்தை மேன்மேலும் மேம்படுத்தும் திட்டங்கள் எங்களுக்கு மட்டுமன்றி, உங்களுக்கும் கண்டிப்பாக உற்சாகமளித்திருக்கும் என நம்புகிறோம்!

முழு அறிக்கையையும் படிக்க, அன்புகூர்ந்து
**www.lta.gov.sg/ltmp2040**
இணையத்தளத்திற்குச் செல்லவும் அல்லது
இந்த QR குறியீட்டை வருடவும்:

Land Transport Authority
We Keep Your World Moving